# காலநிலை மாற்றம்

## குறித்த

## அறிவுக்கு ஒரு துளி



காலநிலை மாற்ற செயலகம்

சுற்றாடல் அமைச்சு

# காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் எனப்படுவது நீண்ட கால வானிலை மற்றும் முறைமைகளின் பாதகமான போக்காக காணப்படுவதுடன், இதன் வாயிலாக மனிதர்களுக்கும், தாய் நாட்டுக்கும் பரியளவில் பாதகமான தாக்கங்களை விளைவித்த வண்ணமும், இயற்கை காரணியாகவும் காணப்படுகின்றது. எரி பொருளை எரித்தல், காடழிப்பு மற்றும் முறையான கழி முகாமைத்துவம் போன்ற காரணிகள் காலநிலை மாற்றப் போக்குக்கு உந்துதலாகவமைந்துள்ளன.





உலகெங்கிலும் உள்ள காலநிலை மாற்றத்தின் முக்கிய தாக்கங்களாக வெப்ப நிலை அதிகரிப்பு, வானிலை மாற்றங்கள், பனிப் பாறைகள் உடீ55ல் மற்றும் பனி மற்றும் கடல் அமிலமயமாக்கல் ஆகியவற்றை சுட்டிக் காட்டலாம்.



உலக சமூகம் இன்று எதிர் கொள்ளும் முக்கிய சுற்றுச் சூழல் பிரச்சினைகளில் ஒன்றாக கால நிலை மாற்றம் காணப்படுகின்றது. இதன் காரணமாக வறட்சி, தீவிர மழைப் பொழிவு, கடல் மட்ட உயர்வு மற்றும் நீரோட்ட முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை பாதகமான தாக்கங்களாக சுட்டிக் காட்டலாம்.




பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கும், காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக் கூடிய சமூகங்கள் மற்றும் சுற்றுச் சூழல் அமைப்புகளுக்கு மனிதர்கள் உயிர் வாழ்வதையும், இயற்கை நிலைப்பாட்டை உறுதி செய்வதற்கும் உடனடியாக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது.

# காலநிலை மாற்றம் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள்

தீவிர மழைப் பொழிவு, புயல்கள் மற்றும் வெப்ப அலைகள் காரணமாக குறிப்பாக இலங்கை பெருமளவில் காலநிலை மாற்றம் காரணமாக பாதிப்படையக் கூடிய நாடாக காணப்படுகின்றது.





2016, 2017 மற்றும் 2018 உள்ளிட்ட சமீபத்திய ஆண்டுகளில் நீடித்த வறட்சி மற்றும் திடீர் வெள்ளப் பெருக்கு காரணமாக இலட்சக்கணக்கான மக்கல் பாதிக்கப்பட்டுள்ளனர். சமூக பொருளாதார இழப்புகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்புகளும் ஏற்பட்டன.

சீரற்ற மழை வீழ்ச்சி போக்கு காரணமாக ஒழுங்கற்ற சிறு போகம் மற்றும் பெரும் போக பருவ பயிர்ச் செய்கைக்கு பெருமளவில் தாக்கங்கள் ஏற்பட்டன. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரத் துறையை அச்சுறுத்தும் அரிசி, காய்கறிகள் மற்றும் பழங்களின் விலைத் தழும்பல் நிலைக்கு வழங்குநர்கள் ஏதுவாக இருந்த வண்ணமுள்ளனர். இது தவிர, பெருமளவில் பாதிப்புக்குள்ளான துறைகளாக விவசாயத் துறை, மீன் பிடித்துறை, கால் நடை வளர்ப்பு, நீர், சுகாதாரம், சுற்றுலாப் பயணத் துறை, கைத்தொழிற் துறை, நீர்ப்பாசனம், கரையோர மற்றும் சமுத்திரம் சார்ந்த துறைகள், சூழல் தொகுதிகள் மற்றும் உயிர்ப் பல் வகைமை, நீர் மின் வலுத் துறை ஆகியன காணப்படுகின்றன.





பசுமை இல்ல வாயு உமிழ்வைத் தணிப்பதற்கும், நிலையான வளர்ச்சி பாதை வழிகளை உறுதி செய்வதற்குமான காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களுக்கு ஏற்ப தீர்க்கமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

UNDP gef

# காலநிலை மாற்றம் மற்றும் விவசாயம்

வெப்ப மாற்றம் மற்றும் இரவு நேர வெப்ப நிலை ஏற்றத் தாழ்வுகள், ஒழுங்கற்ற மழை வீழ்ச்சி, நீடித்த வறட்சி, திடீர் வெள்ளப் பெருக்கு, கடல் மட்ட உயர்வு ஆகிய காலநிலை மாற்றங்கள் விவசாயத் துறையை பெருமளவில் பாதிக்கின்றது.





இலங்கை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நாடாகும். இந் நாட்டிலுள்ள பெரும்பாண்மையான மக்கள் விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர். பயிர்ச் செய்கை எனப்படுவது பொரதும் காலநிலையினால் நிர்ணயிக்கப்பட்டு, மழை வீழ்ச்சி மற்றும் நீர்ப்பாசனத்தை சார்ந்துள்ளது. விவசாயத்திற்குப் போதியளவில் நீர் இல்லாத போது பயிர் விலைச்சலும் குறைவடையும்.

காலநிலை மாற்றம், வானிலை மாற்றம் மற்றும் மழை ஏற்ற இறக்கம் காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்புகள், 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சி குறிப்பிடத்தக்களவில் இலங்கையின் விவசாய உற்பத்தித் திறனை முடக்குவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந் நிலை காரணமாக கிட்டத்தட்ட 644,000 பொது மக்கள் பாதிப்படைந்ததுடன், 900,000 பேர் உணவுப் பாதுகாப்பின்மை நிலைக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.





இலங்கை விவசாயத்தின் மீதான காலநிலை பாதிப்பை பல்வேறு பல்வேறு வழிகளில் நிவர்த்தி செய்கின்றது. எடுத்துக்காட்டாக, காலநிலை பின்னடைவு இசைவு பயிர்களை பயிரிடுதல், பயிர் பல் வகைப்படுத்துகை மற்றும் வன வளர்ப்பு, அடுக்கடுக்கான குளத் தொகுதிகளின் புனரமைப்பு மற்றும் நீரேந்து முகாமைத்துவம்.

# காலநிலை மாற்றம் மற்றும் உயிர்ப் பல் வகைமை

காலநிலை மாற்றம் பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. மேலும் இது விலங்குகளின் நடத்தை மற்றும் தாவர பல் வகைமைத் தன்மை மாற்றத்திலும் குறிப்பாக இயக்கிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடயமாக காணப்படுகின்றது.





இலங்கையானது, உலகிலுள்ள நாடுகளிடையில் குறிப்பாக உயிர்ப் பல் வகைமை அடிப்படையில் முக்கிய புள்ளியாக காணப்படுவதுடன், அதிகளவில் உள் நாட்டுக்குத் தனித்துவமுள்ள உயிரினங்களை தன்னகத்தே கொண்ட நாடொன்றாகவும் முன்னணியில் நிலைத்துள்ளது. இவற்றுள் சதுப்பு நிலங்கள், பவளப் பாறைகள், ஈர நிலங்கள் மற்றும் அடுக்கடுக்கான மர விதானங்கள் சிறந்த நிலைகளை தம்மகத்தே கொண்டுள்ளன.

இத்தகைய உயிர்ச் சூழல் தொகுதிகள் சடுதியான காலநிலை மாற்றங்களான திடீர் வரட்சி நிலை, திடீர் வெள்ளப் பெருக்கு, கடல் மட்ட உயர்வு, சமுத்திய அமிலமயமாக்கம், புயல்கள் மற்றும் மேலுயரும் வெப்ப நிலை ஆகிய காரணிகள் காரணமாக பெருமளவில் பாதிக்கப்பட்ட வண்ணமுள்ளன.





காலநிலை மாற்ற நிலை காரணமாக இலங்கையின் விவசாயத் துறை பெருமளவில் எதிர் மறைவான பாதகமான தாக்கங்களுக்கு முகங் கொடுத்த வண்ணமுள்ளன. காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களிலிருந்து உயிர்ப் பல் வகைமையை பாதுகாப்பதற்கும், பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைத்தல் உள்ளிட்ட தாவர மற்றும் விலங்கின வாழ்விடங்களுக்கும் காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படக் கூடிய இடையூறுகளை தடுப்பதற்கு ஏதுவான பொருத்தமான தழுவல் நடவடிக்கைகளை மிக விரைவாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.



# காலநிலை மாற்றம் மற்றும் காடுகள்

வனங்கள் நீர் மற்றும் வாயு சுத்திகாரப்பையும், உணவு, தங்குமிடம், மழை நீர் தேக்க வைத்திருத்தல், மருந்து மற்றும் பல சேவைகளை வழங்கிய வண்ணமுள்ளன. அவை காலநிலை மாற்றத்தைத் தழுவி அதன் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு துணை சமூகங்கள் உதவிய வண்ணமுள்ளன.





தாவரங்கள் ஒக்சிஜனை வெளியிடுவதுடன், காபன் டயொக்சிட்டை வளி மண்டலத்திலிருந்து உறிஞ்சு கின்றன. அவை கார்பன் மடுவாக முக்கிய பங்கை வகிப்பதுடன், பசுமை இல்ல வாயு உமிழ்வை தணிப்பதில் காலநிலை மாற்றத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளன.

வளி மண்டலத்தில் பசுமை இல்ல வாயு உமிழ்வு செறிவை ஏற்படுத்துவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக காடழிப்பு காணப்படுகின்றது. மரங்களை நடுவதற்கும், வனச் சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதற்கும், காலநிலை மாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கும் தீர்வு காண வேண்டிய தேவை எழுந்துள்ளது.





தற்சமயம் இலங்கையிலுள்ள இயற்கை வன அடர்த்தியின் அளவு கிட்டத்தட்ட 29% ஆகும். இவ் வன அடர்த்தியை 2025 ஆம் ஆண்டளவில் 32% ஐ எட்டுவதே நாட்டின் இலக்காகவுள்ளது. தற்சமயம் ஒரு மில்லியன் மரங்கள் நடுவதை இலக்காகக் கொண்டு ஏராளமான மரங்கள் நடப்பட்ட வண்ணமுள்ளன.

# காலநிலை மாற்றம் மற்றும் கரையோரத்துக்கான பாதிப்புகள்கால

காலநிலை மாற்றம் பனிப் படலங்கள் உருகுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இதன் காரணமாக கடல் மட்டம் மேலுயர்வதற்கு இது ஏதுவாக அமைந்துள்ளது. காலநிலை மாற்றம், கடல் நீர் வெப்பமயமாக்கம் மற்றும் கடல் நீர் அமிலமயமாக்கம், கரையோர அரிப்பு மற்றும் நிலப் பகுதியில் உவர் நீர் உட் பிரவேசிப்புக்கும் ஏதுவாக அமைந்துள்ளது.





இலங்கை போன்ற தீவு சார்ந்த நாடுகள் கடல் மட்ட உயர்வின் தாக்கங்கள் காரணமாக அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகிய வண்ணமுள்ளன. இன்றைய கணிப்புகளுக்கு அமைய, 2100 ஆம் ஆண்டளவில் கடல் மட்டம் 0.2 - 0.6 மீற்றாரனால் அதிகாரக்கக் கூடிய சாத்தியமுள்ளது. (NARA, IPCCC)

இலங்கையில் கிட்டத்தட்ட 1/3 பகுதி கடலோரப் பகுதிக்கு சொந்தமாகவுள்ளது. இது மிகவும் பெறுமதி மிக்க சுற்றுச் சூழல் தொகுதிகளையும், வீட்டுத் தோட்டங்கள், களப்புகள், கண்டல் சூழல் நிலங்கள், கடலோரங்கள் மற்றும் மணல் திட்டுக்கள் ஆகியவற்றை தம்மகத்தே உள்ளடக்கியுள்ளன. மேலும், கரையோரப் பிரதேசத்துடன் தொடர்புடைய ஒரு தனித்துவமிக்க சூழல் தொகுதியாக முருகைக் கற் பாறைத் தொடர்கள் காணப்படுகின்றன.





இலங்கையின் தனித்துவமிக்க கடலோர சுற்றுச் சூழல் தொகுதியின் பின்னடைவு தன்மையை மீலமைப்பதற்கு துரித மற்றும் சாத்தியப்பாடுள்ள தழுவல் நிலைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

# காலநிலை மாற்றம் மற்றும் மானிட குடியேற்றம்

காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளுக்கு குறிப்பாக, திடீர் வெள்ளப் பெருக்கு, நிலச் சாரவுகள், கடல் மட்ட உயர்வு மற்றும் புயல்கள் ஆகியவற்றால் மனித குடியிருப்புகள் மிகவும் மோசமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.





நகரமயமாக்கம் மற்றும் சனத் தொகை பெருக்கம் காரணமாக நகர்ப் புறத்திலும், கிராமப் புறத்திலும் மனித குடியேற்றங்கள் வேகமாக விரிவடைந்த வண்ணமுள்ளன. குறிப்பாக நகரமயமாக்கம் காலநிலை மாற்றங்களுக்கு ஏதுவாக அமையக் கூடிய பசுமை வீட்டு வாயுக்களை வெளியிடுவதில் பெரும் பங்களிப்பை வகிக்கின்றது.

வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச் சாரவு நிலைகள் ஏற்படக் கூடிய பகுதிகளில் அமைந்துள்ள மனித குடியிருப்புகள் பெருமளவில் பாதிப்படையக் கூடியவையாக காணப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் மழை வீழ்ச்சி காரணமாக அரனாயக்க மற்றும் கொழும்பும், 2017 ஆம் ஆண்டு புலத்சிங்கல பிரதேசமும் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகி இலங்கையின் மானிடக் குடியேற்றங்களுக்கு பெருமளவில் பாதிப்புகளை ஏற்படுத்தின.





நகர்ப்புற திட்டமிடல் மற்றும் கிராமப் புற வளர்ச்சியில் காலநிலை மாற்றங்களில் நேரடியாக பங்களிப்பு வழங்கக் கூடிய பசுமை இல்ல வாயு உமிழ்வை குறைத்தல் தொடர்பில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

# ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றம்

புதை படிவ எரி பொருட்களின் அதிகாரத்த பாவனை, வளி மண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களின் கணிசமான அதிகாரப்புக்கும், உலகலாவிய வெப்பமயமாதலும், காலநிலை மாற்றத்திற்கும் வழி வகுக்கின்றது. குறிப்பாக வலுச் சக்தி தோற்றுவாய் உற்பத்தி, போக்குவரத்து மற்றும் தொழில் துறைகளில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.






இலங்கையின் வலுச் சக்தி 50.27% புதை படிவ எரி பொருள் பாவனையின் மூலம் தோற்றுவிக்கப்படுகின்றது. (உலக வங்கி, 2014). இலங்கையின் வலுச் சக்தி துறை புதை படிவ எரி பொருளிலும், (நிலக் கார, பெற்றோல், உயிர் வாயு), நீர், சூரிய சக்தி, காற்று மற்றும் உயிரியல் எரி பொருள் மூலாதாரங்களிலும் தங்கியுள்ளது.

எரி சக்தி கலவையில் புதுப்பிக்கத் தக்க வலுச் சக்தியின் மூலமான பங்களிப்பை அதிகாரப்பதற்கு இலங்கை உறுதியளித்துள்ளது. புதை படிவ எரி பொருட்களிலிருந்து சூரிய சக்தி, காற்று மற்றும் இயற்கை வாயுக்களுக்கு மாறுவதற்கு கூடியளவில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 2050 ஆன ஆண்டளவில் காபன் உமிழ்வை பூச்சியமாக்குவதற்கு இலக்கிடப்பட் டுள்ளது.





இந்த இலக்கை அடைவதற்கென நாடு புதுப்பிக்கத்தக்க எரி சக்தி ஆதாரங்களில் பெருமளவில் முதலீடு செய்வதற்கும், ஆற்றல் திறன் கருவிகள், உபகரணங்கள் மற்றும் காலநிலை நன் நடத்தை ஆகியவற்றைப் பயன்படுத்தி நுகர்வோரை ஊக்குவிப்பதற்கும் உறுதி பூண்டுள்ளது.

U N D P
gef

# காலநிலை மாற்றம் மற்றும் மனித இடம்பெயர்வு

காலநிலை மாற்றங்களினாலான பாதகமான தாக்கங்களான தொடர்ச்சியான வரட்சி நிலை, மற்றும் திடீர் வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக மாற்று வாழ்விடங்களையும், தற்காலிக குடியேற்றங்களையும் நோக்கி குடி மக்கள் உள்ளக ரகீதியில் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.






உலகலாவிய பேரழிவுகள் காரணமாக 2018 ஆம் ஆண்டில் 18.8 மில்லியன் குடி மக்கள் உள்ளக ரகீதியில் இடம் பெயர்ந்துள்ளனர். மேலும், 2050 ஆம் ஆண்டில் உலகலாவிய ரகீதியில் 200 மில்லியன் குடி மக்கள் காலநிலை மாற்றங்களினாலான பாதகமான தாக்கங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான மாற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பார்களென கணிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நீடித்த வறட்சி நிலை காரணமாக ஆயிரக் கணக்கான பொது மக்கள் இடம் பெயரும் அபாயத்தில் உள்ளனர். குறிப்பாக, கிராமப்புற விவசாயிகள் வாழ்வாதாரத்துக்கென பிரதான நகரங்களில் தொழில் வாய்ப்புகளை தேடி இடம் பெயரக் கூடிய வாய்ப்புள்ளது.





காலநிலையின் எதிர் மறைவான தாக்கங்கள் காரணமாக ஏராளமான சமூக, பொருளாதார சிக்கல்கள் ஏற்பட்டு வறுமை நிலை மேலுயரக் கூடிய வாய்ப்புள்ளது. இதனால், காலநிலை மாற்றங்களினாலான பாதகமான தாக்கங்களுக்கு முகங் கொடுப்பதற்கென மிகவும் தீவிரமாக பாதிப்படையக் கூடிய துறைகள், பாகங்கள் மற்றும் சமூகங்கள் பின்னடைவு நிலைக்கு உள்ளாகிய வண்ணமுள்ளன. இதற்கென அவசர மிக முக்கியமான மற்றும் சாரயான நேரத்தில் காலநிலை மாற்றத்தினாலான உள்ளக மற்றும் வெளி நிலை இடம் பெயர்வுகளை தவிர்ப்பது இன்றியமையாது வேண்டப்படுகின்றது.

# காலநிலை மாற்றம் தொடர்பில் இலங்கையின் கடமைகள்

வளி மண்டலத்தில் பசுமை வீட்டு வாயு உமிழ்வின் செறிவை குறைப்பதற்கென 1992 ஆம் ஆண்டில் காலநிலை மாற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகளின் மா நாடு கட்டியெழுப்பப்பட்டது (UNFCC). இது 1992 ஆம் ஆண்டு இலங்கை உட்பட 197 நாடுகளினால் அங்கீகாரக்கப்பட்டது.







UNFCC செயற்பாட்டின் கீழ், 2015 ஆம் ஆண்டு பாரஸ் உடன் படிக்கை கட்டியெழுப்பப்பட்டதுடன், பல நாட்டுத் தலைமைத்துவங்கள் பசுமை வீட்டு வாயு உமிழ்வை குறைப்பதற்கும், அதன் மூலமான காலநிலை மாற்றத் தாக்கங்களை குறைப்பதற்கு தேவையான வழி வகைகளைம் முன்னெடுப்பதற்கும் உறுதி பூண்டன. பாரஸ் ஒப்பந்தத்தில் இலங்கை 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி கைச்சாட்டிட்டது. இதன் கீழ் இலங்கையின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு இலங்கை தேசிய காலநிலை மாற்றக் கொள்கையை (NCCP) வகுத்தது. இதன் கீழான நிலையான அபிவிருத்தி இலக்கின் இலக்கு 13, NCCP உடன் முற்று முழுதாக ஒத்துப் போகின்றது




www.climatechange.lk




முக்கியமான துறைகளான விவசாயத் துறை, மீன் பிடித் துறை, கால்நடை வளர்ப்பு, நீர், சுகாதாரம், கடலோரம் மற்றும் சமுத்திரம், உயிர்ப் பல் வகைமை மற்றும் சூழல் தொகுதிகளில், சுற்றுலாத் துறை மற்றும் பொழுது போக்கு மற்றும் மனித குடியேற்றம் மற்றும் உட் கட்டமைப்பு வசதிகள் போன்ற முக்கிய துறைகளை மையப்படுத்தியதாக 15 வருட காலப் பகுதிக்கென ஒரு தேசிய தழுவல் திட்டத்தை இலங்கை உறுவமைத்துள்ளது.

| | |
|---|---|
| மேற்பார்வை - | கலாநிதி ஆர். டீ. எஸ். ஜயதுங்க<br>பணிப்பாளர்<br>கால நிலை மாற்ற செயலகம் |
| தயாரிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு : | செல்வி அம்பிகா தென்னகோன்<br>சுற்றாடல் முகாமைத்துவ அதிகாரி<br>கால நிலை மாற்ற செயலகம் |
| மொழி பெயர்ப்பு : | எம். ஓ. பைரூஸ் |
| வடிவமைப்பு மற்றும் அச்சிடல | EPA அட்வர்டைசின் (தனியார்) நிறுவனம்<br>கொஸ்வத்த, பத்தரமுல்ல. 0112790771 |




காலநிலை மாற்ற செயலகம்

## சுற்றாடல் அமைச்சு

“சொபாதம் பிவயச”, இல, 416/சீ/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை
பத்தரமுல்லை, இலங்கை.
தொலைபேசி எண்: 94 112034198 தொலை நகல்: 94 112879978
மின்னஞ்சல்: climatesec@gmail.com இணைய தளம்: www.climate change.lk



மூன்றாம் தேசிய தொடர்பாடல் அறிக்கையை தயாரிக்கும் கருத்திட்டத்தின் அனுசரணையுடன்